# போரே முடிவு; புலிகளுடன் சமரசப் பேச்சு இல்லை!

## — பிரதமர் கூறுகிறார்


மாநகராட்சி மன்ற
6-12-1993
யாழ்ப்பாணம்



ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 21 இதழ் 293
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-12-1993


(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது. அவர்களோடு போரிடுவதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை நாம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோதும், அவர்கள் ஆயுதப் போராட்டத்தையே நாடுகின்றனர் என்றும் அவர் "சண்டே ஒப்சேவர்" பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக ஜனநாயக வழியில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் தொடர்ந்தால் பெரும் உயிரிழப்பு ஏற்படும்

(லண்டன்)
இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதாக இருந்தால், இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் பலத்த சேதங்கள் ஏற்படக்கூடும் என்று யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பி. பி. சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் கடந்த வாரம் சமாதானம் என்றும் சமாதானம், போர் என்றும்
(4-ம் பக்கம் பார்க்க)

## ● மக்கள் குடியிருப்புகள் மீது

# பொம்மர் கொடூரத் தாண்டவம்

# 17 பேர் பலி; 40 பேர் படுகாயம்

## குழந்தைகள், சிறுவரும் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ். சின்னக்கடை சந்தை-குருநகர்-பாஷையூர்ப் பகுதியில் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், குடியிருப்புகள் மீதும் நேற்றுக்காலை இருபொம்மர்கள் மேற்கொண்ட மிகக்கொடூரமான தாக்குதல்களில் 17 பேர் பலியாகினர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

## சின்னக்கடையில் எண்மர் பலி

(யாழ்ப்பாணம்)
குருநகர் - சின்னக்கடை சந்தை மீது நேற்றுக் காலை பொம்மர் ஒன்று மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் வியாபாரிகள், வாடிக்கையாளர் என எட்டுபேர் அந்த இடத்திலே பலியானார்கள். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 9-10 மணியளவில் ஏற்கனவே தாக்குதலுக்கு இலக்கான குருநகர் புனித யாகப்பர் ஆலய பின்புறத்தில் அதன் எல்லையில் அமைந்துள்ள சின்னக்கடை சந்தை மீது பொம்மர் ஒன்று இருகுண்டுகளை திடீரென
(2ம் பக்கம் பார்க்க)

## குருநகரில் அறுவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ் நகரை நேற்றுக் காலை 9-05 மணியளவில் திடீரென வட்டமிட்ட இரு பொம்மர்களில் ஒன்று குருநகர் சென் ஜேம்ஸ் சனசமூக நிலையத்தின் பின் பகுதியில் குடிமனைகளை நோக்கி இரு குண்டுகளை வீசித் தாக்கியதில் தாய் 3 பிள்ளைகள் உட்பட அறுவர் உடல் சிதறிப் பலியானார்கள். 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சென். பற்றிக்ஸ் வீதியில் இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலில் ஏழு வீடுகள் தரைமட்டமானதுடன் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எஸ்பீரியா மேரிபோலின் (26 வயது-தாய்) எஸ்பீரியா நிரோஜன் 5வயது-
(4-ம் பக்கம் பார்க்க)

## பாஷையூரில் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)
இரண்டு பொம்மர்கள் நேற்றுக் காலை 10-20 மணியளவில் இரண்டாவது தடவையாகப் பாஷையூர்ப் பகுதியில் வட்டமிட்டு, குடிமனைகளை இலக்கு வைத்துக் குண்டுகளை வீசின. இதனால் இருவர் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்தனர்.

பாஷையூர் பீச் ரோட்டில் உள்ள கபிரியேற்பிள்ளை இயேமர் என்பவரின் வீட்டின் மீது வீசப்பட்ட இரண்டு குண்டுகளும் வீழ்ந்து வெடித்ததில், வீடு முற்றாகத் தரைமட்டமானது அங்கு வெறும் கற்குவியலே காணப்பட்டன.

இத்தாக்குதலில் அவரது மனைவியான கிளோமரி றோசாறி (43 வயது) ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். கபிரியேற்பிள்ளை படுகாயமடைந்
(4ம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சு அதிர்ச்சி இரு வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)
குருநகரிலும், சின்னக்கடை பகுதியிலும், பாஷையூரிலும் நேற்றுக்காலை இடம்பெற்ற பொம்மர்களின் குண்டுவீச்சு அதிர்ச்சியால் வயோதிபர் இருவர் பலியாகியுள்ளனர்.

குருநகரில் குண்டுவீச்சு இடம்பெற்றபோது பாரிய சத்தம் ஏற்படுத்திய அதிர்ச்சியால் யாழ். அத்தியடியில் விவிலியம் ஜெயராஜசிங்கம் (வயது 66) என்பவர் உயிரிழந்தார்.

இதேபோன்று பாஷையூர் பகுதியில் குண்டுத் தாக்குதல் நடைபெற்றபோது அப்பகுதியைச் சேர்ந்த மேரி (வயது 70) என்பவர் உயிரிழந்தார். பல பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் பெருமளவில் அதிர்ச்சியடைந்து காணப்பட்டனர். (கி)

## பலியான, காயமடைந்த பொதுமக்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)
சின்னக்கடை சந்தை குருநகர் - பாஷையூர் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் உயிரிழந்த 16 பேரினதும் காயமடைந்த 40 பேரினதும் விபரம் வருமாறு:

உயிரிழந்தோர் விபரம்:
சின்னக்கடை சந்தை - 1. கந்தையா விக்னேஸ்வரன், வயது - 46, வேலணை தற்போது 3ம் குறுக்குத்தெரு யாழ். 2. யேசுராசா றேஸ்மன் வயது-48 - நியூ பீச
(2ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை எழுதும் மாணவர்கள் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று நடாத்தப்பட்ட அகோர விமானத் தாக்குதலானது இன்று ஆரம்பமாகும் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் மாணவரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு தேவை; இராணுவம் கூறுகிறது

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு வருவதற்கான நெருக்கடி கொடுக்கப்பட வேண்டும் என படையினர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கக் கூடிய அரசியல் திட்டம் ஒன்றும் அவசியம் தேவை எனவும் இராணுவ தரப்பினர் கூறிவருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே என ஜனாதிபதி கூறிவருவது இப்பிரச்சினையை மேலுங் குழப்பியுள்ளது. பேசுவதற்கு ஒன்றும் இல்லை, படையினர் முழுமூச்சுடன் இறங்கி புலிகளை முறியடிக்க வேண்டும் என்ற கருத்தையே
2-ம் பக்கம் பார்க்க

## கிளாலி — பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று 6-ம் திகதி, நாளை 7-ம் திகதி, நாளை மறுதினம் 8-ம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது. —க-சி

## சிசிலின் பதவி விலகலுக்கு ராணுவத்திடையே வரவேற்பு!

(கொழும்பு)
இராணுவத்தளபதி சிசிலின் ராஜினாமாச் செய்தியை அரசு இனித்தான் உறுதிப்படுத்த வேண்டும். சிசிலின் பதவி விலகல் இராணுவத்தினரின் பிரச்சினைகளை தீர்க்குமா என்பதும் சந்தேகமே. சிசிலின் இடத்திற்கு மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா நியமிக்கப்படுவார் எனவும், ஜெரி டி. சில்வாவின் இடத்திற்கு கிழக்கு தளபதி லக்கி அல்கம நியமிக்கப்படுவாரெனவும் செய்திகள்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பயிற்சி வகுப்பு

எழுது வினைஞர், கருமமொழிதாவர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கு 1 மாத கால பயிற்சி வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் 3-30 — 530.- ஆரம்பம்: 06-12-93. கட்டணம்: 200/-. School of Business Administration, 16, 3-rd Cross Street, Jaffna. (கி-634)

### மணமகள் தேவை

லண்டனிலுள்ள 19-05-1961இல் பிறந்த M. Sc. (Electronics) பொறியியலாளருக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை. மணமகனுடைய நட்சத்திரம் சதயம். உயரம் 5' 3''. தோஷமற்ற சாதகம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 631, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (கி-631)

### நுளம்புத்தொல்லையா?

நமக்கில்லை, நுளம்புத் தொல்லை. நாம் இரவில் "நீம் தூபம்" புகைத்து நிம்மதியாகத் தூங்குகிறோம். ஒரு பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே. 25 பக்கற் கொண்ட ஒரு காட் விலை ரூபா 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மிக்க வைற. (ஏ-3641)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், சரப்பு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைச்சுற்றல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களின் பிரபலமான சர்வ வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (கி-626)


# புறநிலைப்படிப்பு பலரையும் பயனடைய வைத்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் புறநிலைப் படிப்புகள் அலகு ஆரம்பிக்கப்பட்டு செயற்படும் ஒரே பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே விளங்குகிறது. இப்புறநிலைப் படிப்புகள் அலகு ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலத்தில் பல அடிப்படைக் கற்கை நெறிகளையும் தொடர் விரிவுரைகளையும் நடாத்தி சமூகத்திலுள்ள பலரையும் பயனடைய வைத்துள்ளது."

இவ்வாறு இதழியல் கற்கை நெறிப் பயிற்சியின் இரண்டாம் தொகுதி பங்குபற்றுனருக்கான ஆரம்பநாள் நிகழ்வில் தலைமைதாங்கிய புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சமூகத்திலுள்ளவர்களை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் நடவடிக்கையாக எமது செயற்பாடு வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்களும் பெரும்பாலானோர்களும் அவர்களுக்கு வேண்டிய கலையில் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள். என்றார்.

முதுபெரும் புலைப்பட இதழியலாளர் திரு. எஸ். கதிரவேல் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். திரு. பி. எஸ். பெருமாள் சிறப்புரை வழங்கினார். -158-ரி

## நூல்கள் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

கச்சாயில் பொது நூலகம் ஒன்றினைத் திறப்பதற்கு நூல்களைச் சேகரிக்கும் பணியில் இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். —154

## மன்றங்கள் நிறுவ கோரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் தமிழ் மன்றம், சைவமன்றம் இல்லாத பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தை மாதம் முதல் மேற்படி மன்றங்களை ஆரம்பித்து வைக்குமாறு சரசாலை இந்து மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 154

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஆறு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் கழகமும், நாளை செவ்வாய்க்கிழமை றேஞ்சர் கழகத்தை எதிர்த்து சித்திவிநாயகர் கழகமும், புதன்கிழமை பாடும்மீன் கழகத்தை எதிர்த்து பொற்பதி கழகமும் மோதும். —வி

## சைவ உலகிற்கு பேரிழப்பு

(கொழும்புத்துறை)

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் மறைவு இன்றைய சைவத் தமிழ் உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று சரசாலை இந்து மன்றம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். (154)

### அரசியல் தீர்வு

1-ம் பக்கத் தொடர்ச்சி

அவரது பேச்சு கோடிட்டு காட்டுவதாக உள்ளது. இது ஜனாதிபதி விஜயதுங்காவின் பகற் கனவாக இருக்கலாமெனவும் பி. பி. ஸி. கூறியது. (கி)

### பலியான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா, 3. ஸ்ரனிஸ்லஸ் பிரகாசியம்மா வயது 51 - மீன் வியாபாரி - பீச்ரோட் - குருநகர் 4. பற்றிக் அந்தோனி பாபிள்ளை வயது - 42 பெண் - பாஷையூர் வீதி 5. சுவக்கின் தோமஸ் வயது - 60 - பேக்கரி வேலையாள் - பழைய பூங்கா வீதி. 6 வேலுப்பிள்ளை நாகராசா வயது -47- வாழைப்பழக்கடை - உரிமையாளர் - வட்டுக்கோட்டை. 7. அன்ரன் சாள்ஸ் வயது-34- பற்றிக்ஸ் வீதி 8 மரியசால் சித்தாத்துரை வயது - 35 - நாவாந்துறை.

குருநகர் சென் பற்றிக்ஸ் வீதியில்: 1. எஸ்பீரியர்மேரி போலின் - வயது - 26-தாய். 2. எஸ்பீரியர் நிரோஜன் - வயது - 5 - மகன். 3. எஸ்பீரியர் யூட்சன் - வயது 4. 4. எஸ்பீரியர் ஜெரீஷ் - வயது $1\frac{1}{2}$ -மகன். 5. சிறில் அகஸ்ரின் சாந்தன் - வயது - 11. 6. பாக்கியநாதன் மயூரன் - வயது - 10

பாஷையூரில்: கிளோமர் ரேசாறி - வயது - 43 - உடற்கரைவீதி, 2. விக்டர் கிருபைரத்தினம் மேன் - வயது - 65 - கோவில் வீதி - கண்டுக்குழி.

மூன்று இடங்களிலும் காயமடைந்த39 பேர்களதும் பெயர்கள் வருமாறு:

பாஷையூரில் குமாரசாமி ஆனந்தலிங்கம் - வயது 44, தே தாஸ் ஜித்ரம்மா - வயது 43, யேசுதாஸ் வேந்தன் - வயது 10, அருளானந்தம் ஷிமானி - வயது 5, மனுவற்பிள்ளை அன்னம்மா - வயது 74 வி. கே. மாலி திரேசம்மா - வயது 64, இவர் கணவர் மரணமானார். சிவசம்பு விஜயரங்கன் - வயது 35, எமில் பேற்பிள்ளை கிலோமர் -வயது 42, இவரது வலது கால் துண்டிக்கப்பட்டது. அவர் மகன் ரமணன் - வயது 10, எமில் பேல் அமலதாஸ் வயது 40, அருளானந்தம் ஜெயமலர் - வயது 45, யோசப் அனிதா - வயது 17, பஸ்தியாம்பிள்ளை ஜெயராணி - வயது 48, ஞானகீலன் எழில்வதனி - வயது 7, குருநகர் பற்றிக்ஸ் வீதியில் சித்தாத்துரை பெவடிக்ற் - வயது 50, மனுவற்பிள்ளை ஜெகநாதன் -வயது 51. சிறில் வுறின் - வயது 24, துளசிரனி - வயது 32, அவர்மகனினனிதா - வயது 29, அவர் பிள்ளைகள் பிரதீபா - வயது 8, றஜனி வயது - 3, அலெக்சாண்டர் அன்னம்மா -வயது 70, ஸ்ரீசேன திரேசம்மா - வயது 46, யாபு டிக்சன் - வயது 3, ஸ்பீரியஸ் நியூடன் - வயது 3, (இவரது தாய், சகோதர, சகோதரி மரணமாயினர்) ஆகியோரும், சின்னக்கடையில் அ. நீற்றம்மா - வயது 58, 3-ம் குறுக்குதெரு கில்லறி திரேசம்மா -வயது 33; 3ம் குறுக்கு அன்ரன் ராணி - வயது 35, 3ம் குறுக்கு லூயிஸ் கிறிஸ்தோபர் - வயது 38, நாவாந்துறை க. இராசசேகரம் - வயது 32, சின்னக்கடை, யோசப் ஜோன் - வயது 75 -சின்னக்கடை, செ. அனிந்திரன் - வயது 18 கொட்டடி, தி. தாஸன் - வயது 41 பீச்ரோட், திபாகரராசா] திருநாவுக்கரசு - வயது 47 சின்னக்கடை, அவர் மகன் சுகன் - வயது 10, வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் - வயது 63 ஏழாலை, அருள்நாயகம் உஷாந்தன் - வயது 10 - சின்னக்கடை; யோசப் இமானுவேல் - வயது 49 - சின்னக்கடை, எ. மெலோசா - வயது 4 - சின்னக்கடை, ஏ. அன்ரா - வயது 5 - சின்னக்கடை; எஸ். கௌரி - வயது 24 - இராசாவின் தோட்டம், திரேசம்மா - வயது 37 - சின்னக்கடை, அகஸ்டீன் - வயது 28 - சின்னக்கடை, கி.இம்மானுவேல்- வயது 48, கி. லோறன்ஸ்- வயது 58 - சின்னக்கடை. எம் குணேஸ் - சின்னக்கடை பாலசுப்பிரமணியம்-வயது38- அரசடி, கீதா - வயது 47- 2ம் குறுக்குத்தெரு, இ. ரவீந்திரன் - வயது 30 - கஸ்தூரியார் வீதி, எஸ்; ஸ்டீபன்- வயது 33 - சின்னக்கடை, ரகுமான் - வயது 23 - 2ம் குறுக்குத்தெரு, எ. வரப்பிரகாசம் - வயது 33 - திருநெல்வேலி, அருள் -வயது 22- நாவற்குழி, எஸ். வரதன் - வயது 10 - சின்னக்கடை, ஆகியோரே காயமடைந்தவர்களாவர். —கி-157

### சின்னக்கடையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீசித்தாக்கியது. இக்குண்டுகள் இரண்டும் பாஷையூர் வீதியிலுள்ள 'தேன்மதி' பேக்கறி மீதும் அதனருகில் இருந்த வாழைப்பழக்கடை ஒன்றின் மீதும் விழ்ந்து வெடித்தன.

இதனால் பேக்கறியும் கடையும் முற்றாக இடிந்து வீழ்ந்தன.

பேக்கறியில் பாண் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுவக்கீன் தோமஸ் வயது 60) அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பாண் தயாரிக்க வைக்கப்பட்டிருந்த பெருமளவு 'மா' முழுவதும் இரத்தமயமாகக் காட்சியளித்தது. பேக்கறி முற்றாகவே தரைமட்டமானது.

இதேபோன்றே வாழைப்பழக்கடையும் முற்றாக தரைமட்டமாகியதுடன் கடையின் உரிமையாளரான வேலுப்பிள்ளை நாகராசா (47 வயது) அதே இடத்தில் உடல் சிதறிப் பலியானார். கடையிலும் கடை வாசலிலும் இரத்தக் கறைகள் பெருமளவில் காணப்பட்டது. மேலும் அப்பகுதியில் தனலிங்கம் வெல்டிங் கடை, ம. பிலிப்பு என்பவரது வீடு மற்றும் 5-ம் குறுக்குத் தெரு சின்னக்கடைச் சந்தியிலுள்ள றிமோ ஹோட்டல் என்பன முற்றாக இடிந்து போய் விட்டன. மூன்று வீடுகள் முற்றாக நாசமடைந்தும் பத்து வீடுகள் வரை சேதமடைந்துமுள்ளன.

இத்தாக்குதலினால் மேலும் சந்தையா விக்னேஸ்வரன் (வயது 46). யேசுராசா ரோஸ் மலர் (வயது 48) ஸ்ரனிஸ்லஸ் பிரகாசியம்மா (வயது 51) பற்றிக் அந்தோனிபாபிள்ளை (வயது 42 பெண்) அன்ரன் சாள்ஸ் (வயது 34), மரியசால் சித்தாத்துரை (வயது 35) ஆகியோர் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானார்கள். இவர்கள் இப்பகுதியில் மீன்வியாபாரம் மற்றும் வியாபாரம், கௌளவு வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களாவர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமையானபடியால் இத்தாக்குதல் நடைபெற்றபோது பல கடைகள் பூட்டப்பட்டிருந்தன. மேலும் சின்னக்கடைச்சந்தை அப்போதே கூடியிருந்ததால் வாடிக்கையாளர்கள் குறைவாகவே காணப்பட்டனர் சின்னக்கடைச் சந்தையினுள் மீன், மரக்கறி, கோழி வியாபாரத்தில் ஈடுபட்டோர் குண்டுவீச்சையடுத்து அவற்றை அந்தந்த இடங்களிலேயே விட்டுவிட்டு உயிர்தப்ப ஓடிவிட்டனர்.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த 'காவல்துறையினர்' சந்தையை மூடி பாதுகாப்பு வழங்கியதால் வியாபாரிகளின் பொருட்கள் அப்படியே அந்தந்த இடத்தில் காணப்பட்டன. படுகாயமடைந்தவர்களும், உயிரிழந்தவர்களும் உடனடியாக மொறிஸ், கார்கள், அம்புலன்ஸ்கள் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

வீதிகளில் மாடு, ஆடு, நாய்கள் இறந்த நிலையில் சிதறிக்காணப்பட்டன. வீதிகள் எங்கும் இரத்தம் திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. எங்கும் மரணஓலம் எழுப்பப்பட்ட வண்ணம் இருந்தது.

மீண்டும் இப்பகுதியில் 10-20 மணியளவில் இரு பொம்மர்களும், ஹெலி ஒன்றும் வட்டமிட்டபோது மக்கள் அபயக் குரலெழுப்பி அலறியடித்த வண்ணம் ஓடிய பரிதாப நிலையைக் காணக் கூடியதாயிருந்தது.

குண்டு வீச்சால் இப்பகுதி கடும்சேதமாகவே காட்சியளித்தது. எங்கும்கரும்புகை படிந்து இருந்தது. (கி)


**UNIVERSITY OF JAFFNA SRI LANKA**

**Admission Test for the Postgraduate/ Diploma in English Language Teaching 1992/93**

The Admission Test for the above course will be held on 1993-12-09 at 10-00 a m in the Ramanathan Hall, University of Jaffna. Please collectyour admission cards on 7th & 8th of December 1993, personally at the Examination Branch.

— REGISTRAR
1993-12-04 (A 3642)

## யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின்

# மேலதிக பயிற்சிநெறிகள் [1994]

பின்வரும் பயிற்சி நெறிகளை 1994-ம் கல்வியாண்டில் பயில்வதற்கான விண்ணப்பங்களை

1993 - 12 - 20-ம் திகதி வரை

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் தகுதியுடையவர்கள் அனுப்பிவைக்கவும்.

பயிற்சிநெறி

1. உயர் தேசிய வணிகத் தேர்வு
2. வியாபாரமும் நிதியியலுமான தேசிய டிப்புளோமா

மேலதிக விபரங்களை அறிய யாழ். தொழில்நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

க. ஜெயரத்தினம்,
அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

93-12-04. (ஏ-3644)


## மழையினால் பயிர்கள் பாதிப்பு

(அரியாலை)

யாழ். குடாநாட்டில் பெய்யும் பெருமழையினால் அநேக கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கத்தரி, மிளகாய், வெண்டி போன்ற மரக்கறி பயிர்கள் அழிந்துள்ளன. இதனால் மரக்கறிக்கு தட்டுப்பாடும் விலையும் அதிகரித்துள்ளது. (59)

# குண்டு வீச்சை நிறுத்துமாறு அரச அதிபர் கோரியதற்கு ரணில் எடுத்த நடவடிக்கை இதுதானு!

## நேற்றைய தாக்குதல் குறித்து பங்குத் தந்தை

(யாழ்ப்பாணம்)

"வழிபாட்டுத் தலமான குருயிருப்புவை மீது விமானத் தாக்குதல் நடத்தப்படுவது குறித்து கடும் நடவடிக்கை எடுப்பதாக, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனித யாகப்பர் ஆலயம் பற்றி கூறியபோது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறி ஒரு தினத்திலேயே அதே ஆலயத்திற்கு அருகில் நேற்று கோரமான விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தான் பிரதமரால் எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கையோ என எண்ணத் தோன்றுகிறது."

இவ்வாறு குருநகர் பங்குத் தந்தை ஆர். எம். ஜி. நேசநாயகம் நேற்றுக் காலை குருநகர்ப் பகுதியில் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுக் குறித்துக் கூறுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அகிம்சை முறையில் மௌனமாகக் கறுப்புப் பட்டி அணிந்து, ஆர்ப்பாட்டம் எதுவும் இன்றிக் கோஷங்கள் எழுப்பாமல் அமைதியான பேரணி நடத்தி, எமது மக்களின் உளத் தாக்கங்களை எழுத்து வடிவில் சமர்ப்பித்தோம். நேற்று இக்குண்டு வீச்சு ஆலயத்தின் அருகில் நடத்தப்பட்டதானது, நாம் நடத்திய அமைதிப் பேரணியின் எதிரொலிதானு என்று எண்ணக்கூடியதாக உள்ளது.

இது குறித்துச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அடுத்த நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகக் குருநகர்ப் பங்கின் செயற்பாட்டுக் குழு ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் கூறினுர். -வ-இ

# இரு குண்டுகள் கடலில் வீழ்ந்தன

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் பீச்ரோட் பகுதியில் இரண்டு பொம்மர்கள் அடுத்தடுத்துக் குண்டுகளை வீசியபோது, இரண்டு குண்டுகள் கடலில் வீழ்ந்து வெடித்ததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

குடிமனைகளை இலக்கு வைத்தே இக்குண்டுகள் வீசப்பட்டபோதும், இரண்டு குண்டுகளும் கடலில் வீழ்ந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

இதேவேளை, ஏனைய இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றபோது கரும்புகைகள் பெருமளவில் எழுந்தன. -இ

# மன்னுர் அகதி முகாம்களில் உணவுப் பற்றாக்குறை

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதென்றும், அதனுல் உடனடியாக யூ. என். எச். சி. ஆர். நிவாரண உதவிகளை வழங்கவேண்டும் என்றும் கத்தோலிக்க குருமார்கள் கேட்டுள்ளனர்.

மடு அகதி முகாமில் 32,000 தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். இவ்விடயத்தில் யூ. என். எச். சி. ஆர். தலையிடாவிட்டால், அகதிகள் பெரும் பிரச்சினையைச் சந்திக்கவேண்டிவரும் என்று கத்தோலிக்க குருமார் சுட்டிக்காட்டி உள்ளனரென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-இ

# யாழ். குடாவில் 30,000 மாணவர் பரீட்சை எழுதுகின்றனர்

(கொழும்பு)

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு யாழ். குடாவிலிருந்து 30 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதப்வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமிருந்து 5 லட்சத்து 28 ஆயிரம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும் 24 ஆயிரம் பரீட்சை உத்தியோகத்தர்கள் கடமையாற்றவுள்ளதாகவும் 190 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடபகுதியில் இப்பரீட்சையை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். —ஏ-இ

# உரம், உருளைக்கிழங்குடன் 'றுகுணு' வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென 115 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குடனும் 496 மெற்றிக் தொன் உரவகைகளுடனும் "றுகுணு" கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருட்களை எடுத்துவரும் 'பாஜ்' உடைந்த நிலையில் இருந்ததினுல் நேற்று பொருட்களை இறக்கும் பணி நடைபெறவில்லை. இன்று இறக்கும்பணி ஆரம்பிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உணவுச் சேவை உதவி ஆணையாளரால் எடுத்து வரப்பட்ட விதை உருளைக்கிழங்குடன் எஸ். ஏ. 350 மெ. தொன், எம். ஓ. பி. 80 மெ. தொன், ரீ. டி. எம். 66 மெ. தொன் உரவகைகளும் எடுத்து வரப்பட்டுள்ளது.

இக்கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கு மருந்துப்பொருட்களும் எடுத்து வரப்பட்டுள்ளது. (வ-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், இவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10/336/B.

# 'விமானப் படையின் காட்டுமிராண்டித்தனம்"

யாழ்ப்பாணம்

"விடுதலைப் புலிகளுடன் போருக்கு நேரடியாக முகம் கொடுக்க முடியாத ஸ்ரீலங்கா அரசு அப்பாவி மக்கள் மீதும் புனித வணக்கத் தலங்கள் மீதும் தனது காட்டுமிராண்டித்தனத்தை கொடூரமாகக் காட்டியுள்ளது."

நேற்றுக் காலை கொழும்புத்துறைப் பகுதியை உள்ளடக்கிய பகுதியில் நடைபெற்ற பொம்மர் குண்டுவீச்சுக் குறித்து கருத்து வெளியிடுகையில் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் அருள் திரு. இம்மானுவேல் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்: இந்நடவடிக்கையானது ஸ்ரீலங்கா அரச படைகளின் மிகக் கீழ்த்தரமான காடைத்தனமான செயல் என்றும் குறிப்பிட்டார். —க-இ

## இன்று 'ஒளி வீச்சு'

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தினுல் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஒளி வீச்சு' ஒக்டோபர் மாத வீடியோ சஞ்சிகை இன்று மாலை 5-00 மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படும்.

இது அகன்ற திரையில் (புறொஜக்டர்) காண்பிக்கப்படும். இம்மாத ஒளிவீச்சிலும் வழமையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன. —இ

### போரே முடிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதை அடுத்து வேறு வழியின்றி அரசு போரிட்டு வருகிறதென்றும் பிரதமர் கூறியுள்ளார்.

சமீபத்தில் புலிகளின் தாக்குதல்களினுல் அரசு இருமுறை பலத்த பின்னடைவுகளைச் சந்தித்தபோதும் இராணுவம் தனது பணியை ஆற்றி வருகின்றதாம்.

ஓய்வுபெற 5 மாதங்கள் இருக்கின்றபோதும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன தமது பதவியை ராஜினுமாச் செய்யவிருப்பதை அடுத்தும், இதனுல் இராணுவத்தில் மாற்றம் ஏற்பட இருப்பதை அடுத்தும் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. ம-க-இ

### சிசிலின் பதவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும் கூறுகையில்; இராணுவ தலைமைப் பீடத்தில் ஏற்படவுள்ள இம் மாற்றங்களை படையினர் பெருமளவில் வரவேற்றுள்ளனர். ஆனுல் இவை வரவேற்கும் அதேவேளை புலிகளுக்கெதிரான போரில் இராணுவம் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் கூறியுள்ளனர். சிசில் ஓய்வு பெறுவதன் மூலம் இராணுவத்தினரிடையே இருந்துவரும் உட்பூசல்கள், கசப்புணர்வுகள் நீங்கும்.

இராணுவத்தினரிடையே நிலவிய உட்பூசலால் பல அதிகாரிகள், ஓய்வுபெறும் காலத்திற்கு முன்பே ஓய்வு பெற்றனர். மேலும் புலிகளுக்கு எதிரான போரில் சரியான பாதையில்லாமல் இயங்கும் இராணுவம் என்றதொரு நிலையையும் படையினர் ஏற்படுத்தினர். மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வாவிற்கும் அரசு தலைமை அதிகாரிகளுக்குமிடையில் உறவு நிலை அவ்வளவு நல்லதாக இல்லாதிருக்கக்கூடும். இதனுல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் முறுகல் நிலை இருக்குமென படையினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

வடக்கில் பல இராணுவ முகாம்கள் தாக்குதலுக்குள்ளாகும் வாய்ப்புக்கள் உள்ளன. பூநகரியில் படையினருக்கு ஏற்பட்ட இழப்பு இந்தப் பிராந்தியத்தில் இராணுவத்தின் பங்கை கணிக்க வேண்டிய, பரிசீலிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளதென்று பி. பி. ஸி. குறிப்பிட்டது. (இ)

### குருநகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகன்) எஸ்பீரியர் யூஜின் (4 வயது - மகன்) எஸ்பீரியர் ஜெரீஞ (1½ வயது - மகள்) அவ்வீட்டிலிருந்த ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருந்த றிகல் அலெக்ஸ் சந்திரன் (11 வயது) பக்கத்து வீட்டைச் சேர்ந்த பாக்கியநாதன் மயூரன் (10 வயது) ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள்.

இக்குண்டு வீச்சினுல் பாலோறன்ஸ், மருசலீன், நசரேன் (எஸ்பீரியர்) ராசா பாக்கியநாதன், சித்தாந்தரை பேதுரு, சிந்தாந்துரை பெனடிற், கிறேஷியன் ஆகியோரது வீடு தரைமட்டமானது.

இக்குண்டு வீச்சுக்களைத் தொடர்ந்து மக்கள் தமது கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு மிகவும் பீதியடைந்த நிலையில் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றனர்.

குண்டுவீச்சு விமானங்கள் வானத்தில் வட்டமிட்டு பொது மக்கள் குடிமனைகளை நோக்கி குண்டுகளை வீசிக்கொண்டிருக்கும் போது கடல் ஓரப் பகுதியில் வட்டமிட்ட ஹெலி ஒன்று இடைக்கிடை துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்த வண்ணம் இருந்தது. இதே நேரம் மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் ராணுவம் குருநகர் கரையோரத்தை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தது. (வி-சி)

### மாலை நேரம் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்

வலிகாமம், கன்னுகம், ஏழாலைப்பகுதியிலும், உரும்பிராய்ப் பகுதியிலும் நேற்று மாலை 6-30 மணியளவில் பொம்மர் விமானம் குண்டுவீச்சை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. -இ

### குருநகர் சோகமயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் - [illegible] பகுதிகள் ஒரே சோகமயமாகக் காட்சியளிக்கின்றன. எங்கும் ஓலம் மரண ஓலம் கேட்கின்றது.

கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. நேற்றைய குண்டு வீச்சில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்களின் வீடுகள் ஒரே சோகமயமாகக் காணப்படுகிறது. (59-இ)

### பாஷையூரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார். இவரது வலது கால் துண்டிக்கப்பட்டுள்ளது. இவரின் இரண்டு பிள்ளைகளான றேசானி (வயது 11), றமணன் (வயது 6) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் வீட்டுக்கு அருகில் இருந்த மேரி (வயது 70) என்ற வயோதிபர் அதிர்ச்சியால் மரணமானுர். இதே வேளை, இத்தாக்குதலில் தென்னைகள் உட்பட பல மரங்கள் முறிந்தன. பஸ்தியாம்பிள்ளை என்பவரின் வீடும் பலத்த சேதமடைந்தது.

இத்தாக்குதலில் அருட் சகோதரிகள் தங்கும் விடுதி ஒன்றும் சேதமடைந்தது -வி-சி

### யுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போர் என்று அறிவித்துள்ளனர். இரு பகுதியினரும் இப்படிப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இயலக்கூடிய அளவுக்கு இரு பகுதியினரும் சமாதானத்தின் பக்கம் வரவேண்டும், இல்லாவிடில் இன்னும் 50 ஆண்டுகள் இப்படியே நடந்து செல்லும். இதனுல் பொதுமக்கள் பல துன்பங்களை அனுபவிப்பார்கள். மரணத்தைத் தழுவுவார்கள்.

இராணுவத்தில் இறந்தவர்களில் அநேகர் அநுராதபுரம், மதவாச்சி போன்ற பகுதிகளில் வாழும் ஏழைச் சிங்கள இளைஞர்களே எனது அறிந்தேன். அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி, யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்கி பொதுமக்கள் சுமுகமாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ருர். -ம-சி

### பரீட்சை எழுதும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தாக்குதலில் கொல்லப்பட்டும், படுகாயமடைந்துமுள்ளவர்களின் உறவினர்களான பெருமளவுமாணவர்கள் இன்று பரீட்சைக்கு தோற்றக் கூடிய மனநிலையில் இல்லை எனவும் இவர்கள் பலத்த அதிர்ச்சியடைந்திருப்பதாகவும் பெற்ருேர் பலர் தெரிவித்தனர்.

மேலும் நேற்றைய தாக்குதல் இடம் பெற்ற பகுதியிலேயே யாழ். நகரின் முன்னணி பாடசாலைகளான சென்.ஜோன்ஸ், சென். பற்றிக்ஸ், கண்டுக்குழி மகளிர் கல்லூரி, தமிழ், ஆங்கில கொன்வென்ட்டுகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பரீட்சை நடைபெறும் இடங்களுக்கருகே உள்ள வீடுகள், கடைகள், பரீட்சார்த்திகளுக்கு இடையூறு விளைவிக்காமல் தொலைக்காட்சி, வானெலி போன்றவற்றின் சத்தத்தைக் குறைத்துப் பாவிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நேற்று 'ரூபவாஹினி' மூலம் அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-ம-இ)